கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.
அ.வ.எண்.24/2021
நாள்.18.01.2024

2024ம் ஆண்டு ஜனவரி 18 ஆம் தேதி பிரட்ரிக் அருள் என்பவரின் வாக்குமூலம் (1989–ம் ஆண்டு 55வது விதியின் 9வது ஏற்பாட்டின்படி) திரு. R. பிரகாஷ், இளநிலை உதவியாளர் என்பவரது ஆணையீட்டால் உறுதி கூறப்படுகின்றது. பிரமாணம் செய்யப்படுகிறது.

==========================================================

| | |
|---|---|
| பெயர் = பிரட்ரிக் அருள் | தகப்பனார் பெயர்= திவ்வியராஜ் |
| கிராமம் = | தாலுக்கா = |
| சாதி = | சமயம் = |
| தொழில் = | வயது = 63 |

==========================================================

**PW 1 மு.வி**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணைக்காக நிரூபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டு நான் கையொப்பம் செய்துள்ளேன். கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்கிறேன். அதனை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

30.06.1930 தேதியிட்ட சின்னு வன்னியர், சாமிக்கண்ணு வன்னியருக்கு எழுதி கொடுத்த ஒத்தி பத்திரம் அசல் வா.சா.ஆ.1, 27.10.2018 தேதியில் இறந்துபோன எனது தந்தையின் இறப்பு சான்றிதழ் கணினி பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.2, 17.06.1977 தேதியிட்ட ஆரோக்கியசாமி, மதலைமேரிக்கு எழுதி கொடுத்த ஒப்பந்த பத்திரம் அசல் வா.சா.ஆ.3, 17.06.1977 தேதியிட்ட ஆரோக்கியசாமி, மதலைமேரிக்கு எழுதி கொடுத்த கடனுறுதி சீட்டு அசல் வா.சா.ஆ.4,

12.08.2020 தேதியிட்ட கல்லக்குடி காவல்நிலையத்தில் வழங்கப்பட்ட புகார் மனு ரசீது அசல் வா.சா.ஆ.5, எனது ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் <u>வா.சா.ஆ.6</u> ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(வா.சா.ஆ.1, வா.சா.ஆ.3 – வா.சா.ஆ.5 வரையுள்ள ஆவணங்கள் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

(மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய வழக்கானது 16.02.2024 ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)